119264

No. of Printed Pages : 12

**6063**

பதிவு எண்
Register Number

# PART - III

# வணிகவியல் / COMMERCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

Time Allowed : 3 Hours ] [Maximum Marks : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Black or Blue ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART - A

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

**Note :** Answer **all** the questions.

**I.** **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **40x1=40**

Choose the correct answer :

**1.** கூட்டாண்மை ஏற்படுவது :

(அ) சட்டத்தின்படி

(ஆ) வெளிப்படுத்திய உடன்படிக்கையின்படி

(இ) வெளிப்படை அல்லது உட்கிடை உடன்படிக்கையின்படி

(ஈ) வம்சாவழி சொத்துரிமையின்படி

Partnership may come into existence :

(a) By the operation of law

(b) By an express agreement

(c) By an express or implied agreement

(d) By inheritance of property

[ திருப்புக / Turn over

2. ஒரு பன்னாட்டு நிறுமம் __________ என அழைக்கப்படுகிறது :

(அ) உலக அளவில் பெரியது (ஆ) கூட்டாண்மை

(இ) கூட்டுறவு சங்கங்கள் (ஈ) பொதுக் கூட்டுரு

A multinational company is also known as :

(a) Global giant (b) Partnership

(c) Co-operative society (d) Public corporation

3. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது :

(அ) விரைவாக (ஆ) தாமதமாக (இ) இரண்டுமில்லை

Decision-making process in sole trading business is :

(a) Quick (b) Slow (c) Neither quick nor slow

4. தனியாள் வணிகத்தில் :

(அ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலாது

(ஆ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலும்

(இ) இரண்டுமில்லை

A Sole Trader :

(a) Cannot keep his business secrets

(b) Can keep his business secrets

(c) None of the above

5. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல் :

(அ) 1949 சட்டம் (ஆ) 1956 சட்டம் (இ) 1932 சட்டம்

A Partnership firm may be registered under :

(a) 1949 Act (b) 1956 Act (c) 1932 Act

6. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை :

(அ) முதல்வர் மற்றும் முகவர்

(ஆ) உரிமையர் மற்றும் வேலையாளர்

(இ) எஜமானர் மற்றும் பணியாளர்

In partnership there exists a relationship of :

(a) Principal and Agent

(b) Owner and Servant

(c) Employer and Employee

7. தன் பெயரை மட்டும் வியாபாரத்தில் பயன்படுத்த அனுமதிக்கும் கூட்டாளி :

(அ) உழையா கூட்டாளி அல்லது உறங்கும் கூட்டாளி

(ஆ) பெயரளவு கூட்டாளி அல்லது பாசாங்கு கூட்டாளி

(இ) முரண் தடைக் கூட்டாளி

A person who lends his name to be used as partner in the business is called :

(a) Sleeping partner or Dormant partner

(b) Nominal partner or Ostensible partner

(c) Partner by Estoppel

8. பொது வரையறு நிறுமத்தில் குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை :

(அ) 2 (ஆ) 3 (இ) 7 (ஈ) 10

The minimum number of members for a public limited company is :

(a) 2 (b) 3 (c) 7 (d) 10

9. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை (Table-A) என்பது :

(அ) நிகழ்ச்சி குறிப்பேட்டின் மாதிரி

(ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

(இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி

(ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

Table A of the Companies Act is a :

(a) Model minutes book

(b) Model form of balance sheet

(c) Model of Articles of Association

(d) Model of Memorandum of Association.

10. முன்னுரிமை பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது :

(அ) பங்காதாயம் பெறுவதில் மட்டும்

(ஆ) நிறுமம் கலைப்பிற்குள்ளாகி முதல் தொகையைத் திருப்பி தரும்பொழுது மட்டும்

(இ) வாக்குரிமையைச் செலுத்துவதில்

(ஈ) பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின்பொழுது பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்.

A preference share has priority in :

(a) Dividend only

(b) Only in return of capital at the time of winding up

(c) Voting rights

(d) Both dividend and return of capital on winding up

11. ஒரு பொதுவரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு :

(அ) ₹ 5,000-க்கு மிகாமல்
(ஆ) ₹ 5,00,000-க்கு மிகாமல்
(இ) ₹ 50,000-க்கு மிகாமல்
(ஈ) ₹ 500-க்கு மிகாமல்

The value of Qualification shares of a director in a public limited company shall not exceed :

(a) ₹ 5,000
(b) ₹ 5,00,000
(c) ₹ 50,000
(d) ₹ 500

12. தகுதி பெற்ற நிறுமச் செயலரை நியமித்தல் கீழ்கண்டவற்றில் எந்நிறுமத்திற்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது ? செலுத்தப் பெற்ற பங்கு முதல்

(அ) ₹ 5,00,000-க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
(ஆ) ₹ 50,00,000-க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
(இ) ₹ 25,00,000-க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
(ஈ) ₹ 15,00,000-க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

A company should compulsorily appoint a Qualified Company Secretary having a paid up capital of more than :

(a) ₹ 5 Lakh
(b) ₹ 50 Lakh
(c) ₹ 25 Lakh
(d) ₹ 15 Lakh

13. தனிவரையறு நிறுமம் தொழிலை தொடங்குவது :

(அ) கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன்
(ஆ) தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்ற பிறகு
(இ) பதிவாளரிடமிருந்து பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்
(ஈ) பதிவாளரிடம் அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர்

A private limited company can commence business :

(a) Immediately on receiving the certificate of incorporation.
(b) Only after the certificate of commencement of business is received.
(c) On getting the name approval from the Registrar.
(d) On filing all the documents necessary for formation with the Registrar.

14. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை :

(அ) பொது விடுப்புகள் (ஆ) விற்பனைக்கான தருமொழி

(இ) மேலாண்மை தரகர்கள் (ஈ) ஒப்புறுதியளித்தல்

The popular method of sale of new shares in India is :

(a) Public issue (b) Offer for sale

(c) Managing directors (d) Underwriting

15. சபைத் தலைவருடன் சேர்ந்து செபியில் இவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர்.

(அ) 5 (ஆ) 7 (இ) 6 (ஈ) 8

SEBI has the following number of members including Chairman :

(a) 5 (b) 7 (c) 6 (d) 8

16. இது புதிய நிறுமங்களின் முதல் விடுப்புகளை வெளியிடும் :

(அ) முதன்மைச் சந்தை (ஆ) இரண்டாம் நிலைச் சந்தை

(இ) பொருட்கள் சந்தை (ஈ) ஒழுங்குமுறை விற்பனைச் சந்தை

The first issues are floated in :

(a) Primary market (b) Secondary market

(c) Commodity market (d) Regulated market

17. கூட்டுறவில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை :

(அ) 2 (ஆ) 7 (இ) 10 (ஈ) 25

The minimum number of members required to form a co-operative society is :

(a) 2 (b) 7 (c) 10 (d) 25

18. முதன்முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு :

(அ) இங்கிலாந்து (ஆ) அமெரிக்கா

(இ) சுவிட்ஸர்லாந்து (ஈ) இந்தியா

Consumers co-operation was first successful in :

(a) England (b) USA

(c) Switzerland (d) India

19. பொது மக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் :

(அ) துறைவாரி அமைப்பு (ஆ) பொதுக் கழகம்

(இ) அரசு நிறுமம் (ஈ) மேற்கூறிய நிறுவனங்கள் ஏதுமில்லை

Public can also subscribe to the share capital of :

(a) Public corporation (b) Departmental undertaking

(c) Government company (d) None of these

20. அரசு நிறுமம் இவற்றின் கீழ் பதிவு செய்யப்படுகிறது :

(அ) மைய அல்லது மாநில அரசின் தனிச்சட்டம்

(ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956

(இ) அரசியல் அமைப்பு சாசனம்

(ஈ) அரசாணை

Government companies are registered under :

(a) Special Statute of Government

(b) Companies Act 1956

(c) Royal Charter

(d) Order of the Government

II. **கோடிட்ட இடங்களை நிரப்புக :**

Fill in the blanks :

21. அரசாங்கத்தின் கொள்கைகள் __________ சாதகமாக உள்ளது.

Government policy is also favourable towards __________.

22. தனி வணிகரின் பொறுப்பு __________ ஆகும்.

Sole Trader has __________ liability.

23. __________ கலைப்பு என்பது அனைத்து கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு முறிந்து விடுதலாகும்.

Dissolution of __________ means putting an end to the relationship among all the partners in a partnership firm.

24. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடம் பெறச் செய்வது __________ எனப்படும்.

Inclusion of securities in the official list of stock exchange is called __________.

25. கோப்பரெரி என்ற இலத்தீன் மொழியின் பொருள் __________.

The Latin word co-operari means __________.

26. ஒரு கூட்டாண்மை அமைப்பில் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரும் __________ என அழைக்கப்படுகின்றனர்.

Persons who enter into partnership are individually called as __________.

27. ஒரே சமயத்தில் __________ பொது நிறுமங்களுக்கு மேல் ஒரு நபர் மேலாண்மை இயக்குநராக பணியாற்ற முடியாது.

A person cannot act as a Managing Director of more than __________ public companies at a time.

28. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம் __________.

The primary aim of state enterprise is __________.

29. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள் __________.

Service is the main objective of __________.

30. __________ புதிய பங்குகளை வெளியிட இடைத்தரகர்களாக செயல்படுகின்றனர்.

__________ act as an intermediary to float new shares.

31. ஒரு. கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க வருகை தர வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கை __________ எனப்படும்.

The minimum number of members required for a meeting is known as __________.

32. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக __________ இல் பெயரிடப்பட்டிருப்பர்.

First directors are named in the __________.

[ திருப்புக / Turn over

33. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது __________ இயக்குநர்கள் இருக்க வேண்டும்.

A private company should have at least __________ directors.

34. அவசர காலங்களில் கூட்டாண்மை நிறுவனத்தின் நன்மைக்காக கூட்டாளி ஒருவர் பயன்படுத்தும் உரிமைக்கு __________ என்று பெயர்.

__________ authority is right vested with a partner to be used in emergency situations to protect the interest of the firm.

35. இரண்டாம் நிலைச்சந்தை முதன்மைச் சந்தையில் விற்கப்பட்ட __________ களின் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது.

Secondary market deals with __________ traded in primary market.

36. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பை __________ நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்.

The minimum subscription specified in the prospectus must be received within __________ days.

37. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ள தேவையில்லாத நிறுமம் __________ நிறுமம் ஆகும்.

The company which need not have a separate Articles of Association of its own is __________ company limited by shares.

38. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப நட்டம் __________ பகிர்ந்தளிக்கப்படுகிறது.

The profit and loss of a Partnership firm is shared in the __________.

39. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது __________.

The oldest form of public enterprise is __________.

40. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் __________ என அழைக்கப்படுகின்றன.

Preference shares which carry a right to get arrears of dividend are known as __________.

## பகுதி - ஆ / PART - B

குறிப்பு : (i) ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். **10x4=40**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **நான்கு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **any ten** questions.

(ii) Answer to each question should **not exceed four** lines.

**41.** தரவரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன ?
What is Scalar principle ?

**42.** வாரிய அமைப்பின் பொருள் பற்றிக் கூறுக.
State the meaning of Board Organisation.

**43.** தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளுள் ஏதேனும் நான்கு எடுத்துக்காட்டுகளைத் தருக.
Give four examples of co-operative supermarket in Tamil Nadu ?

**44.** அரசுத் தொழில் என்றால் என்ன ?
What are State Enterprise ?

**45.** போல்ட் என்பது யாது ?
What is BOLT ?

**46.** நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன ?
What is an Agenda ?

**47.** குறுமப் பங்கொப்பம் என்றால் என்ன ?
What is Minimum Subscription ?

**48.** ஒரு நபர் ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது ?
What is meant by one man one vote ?

**49.** கடனீட்டுப் பத்திரம் வரைவிலக்கணம் தருக.
Define Debenture.

50. அரசு நிறுமம் என்றால் என்ன ?
What do you mean by a Government Company ?

51. கூட்டாளிகளின் வகைகளில் ஏதேனும் நான்கினைக் கூறுக.
Mention any four kinds of partners.

52. தனியாள் வணிகர் என்பார் யார் ?
Who is a Sole Trader ?

53. சிறப்புப் பொதுக் கூட்டம் எப்பொழுது கூட்டப்படுகிறது ?
When is Extraordinary General Meeting convened ?

54. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன ?
What is Limited Partnership ?

55. துறைமுறை அமைப்பிற்கு ஏதேனும் நான்கு உதாரணங்களைத் தருக.
Give four examples for Departmental Organisation.

## பகுதி - இ / PART - C

குறிப்பு : (i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளி. **5x8=40**
(ii) ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவிற்கு மிகாமல் விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **any five** questions.
(ii) Answer to each question should **not exceed one** page.

56. இந்து கூட்டுக் குடும்பம் பற்றி சிறு குறிப்பு வரைக.
Write short notes on Joint Hindu Family business.

57. கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலை பற்றி விவரி.
Explain the position of minor in the partnership firm.

58. பங்குகளை வட்டத்தில் வெளியிட உள்ள நிபந்தனைகளை விளக்குக.
What are the conditions for issuing shares at a discount ?

59. கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் எட்டு குறைபாடுகளை விவரிக்க.
Briefly explain any eight demerits of co-operative societies.

60. ஒரு பொது வரையறை நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர் ?
How are directors appointed in a public limited company ?

61. பொதுத்துறைக்கும், தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளுள் ஏதேனும் எட்டினை எழுதுக.
Write any eight differences between Public and Private Sector.

62. தனிவரையறு நிறுமத்திற்கு கிடைத்திருக்கும் ஏதேனும் எட்டு சலுகைகளை விளக்குக.
Explain any eight privileges of Private Companies.

63. முதலீட்டாளர், ஊக வணிகர், இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?
Differentiate between Investors and Speculators.

## பகுதி - ஈ / PART - D

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **4x20=80**
(ii) ஒவ்வொன்றிற்கும் **இரு பக்க** அளவிற்கு மிகாமல் விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **all** the questions.
(ii) Answer to each question should **not exceed two** pages.

64. (அ) அமைப்பின் கோட்பாடுகள் ஏதேனும் பத்தினை சுருக்கமாக விவரிக்க.

**அல்லது**

(ஆ) துறைவாரி அமைப்பின் இயல்புகளையும், நிறை குறைகளையும் விளக்குக.

(a) Explain briefly any ten principles of Organisation.

**OR**

(b) Discuss the features, merits and demerits of Departmental Organisations.

65. (அ) தனியாள் வணிகரின் ஏதேனும் பத்து நன்மைகளை விவரி.

**அல்லது**

(ஆ) பங்குகட்கும் கடனீட்டுப் பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

(a) Explain any ten merits of Sole Proprietorship.

**OR**

(b) Distinguish between Shares and Debentures.

66. (அ) கூட்டாண்மையின் கூறுகள் ஏதேனும் பத்தினை விவரி.

**அல்லது**

(ஆ) பங்கு மாற்றகத்தின் நன்மைகள் யாவை ?

(a) Explain any ten features of Partnership.

**OR**

(b) What are the benefits of Stock Exchange ?

67. (அ) ஒரு நிறுமச் செயலரின் பணிகளும், கடமைகளும் யாது ?

**அல்லது**

(ஆ) கூட்டுபங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவு சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் எவையேனும் பத்தினை அட்டவணையிடுக.

(a) Discuss the functions and duties of Company Secretary.

**OR**

(b) Tabulate any ten differences between the Joint Stock Company and Co-operative Society.

-o O o-